## அபி வெனுவென் அபி நிதியம் - 2015

அபி வெனுவென் அபி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதிய அதிகாரச்சட்டத்தின் 11(7) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று அமைச்சின் செயலாளருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, அபி வெனுவென் அபி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் ரூபா 188,619,663 தொகையான அபிவிருத்திச் செலவினம் மற்றும் ரூபா 2,220,044 தொகையான செயற்பாட்டு செலவினம் என்பவற்றை தனித்தனியாகக் காண்பிப்பதற்குப் பதிலாக தனிப்பெறுமதியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) போலியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டு இரண்டு வீடுகளைப் பெற்றமையால் அதன் கிரயத்தை உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்டுக் கொண்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் அறவிட வேண்டிய மீதி ரூபா 1,472,254 ஆகும். இந்த அறவிடவேண்டிய மீதி நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் தொலைத்தொடர்பு கோபுரக் கட்டண வருமானம் ரூபா 3,389,197 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டின் போது 03 மாவட்டங்களில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட இராணுவ வீடமைப்பு செயற்திட்டங்களுக்குரிய ரூபா 55,910,607 தொகையான செலவினத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான செலவின விபரம் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டின் போது தொலைத்தொடர்பு கம்பனியொன்றிலிருந்து கிடைக்கவேண்டிய தொலைத்தொடர்பு கோபுரக் கட்டணம் வருமானப் பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் ரூபா 67,527,418 ஆக இருந்த போதிலும், சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் ரூபா 55,254,186 ஆனமையால் ரூபா 12,273,232 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அதற்கான காரணங்களைக் கண்டறிந்து சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 757 இன் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புத்தகப் பெறுமதி ரூபா 11,366,664 தொகையான நிலையான சொத்துக்கள் மற்றும் சிறு உபகரணங்கள் தொடர்பான பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 104,762,495 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 68,264,236 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 173,026,731 அதிகரிப்பைக் காட்டியது. நன்கொடையாக பொது மக்களின் பங்களிப்பு மற்றும் முதலீட்டு வட்டி வருமானம் முறையே ரூபா 24,672,179 இனாலும், ரூபா 27,936,355 இனாலும் குறைவடைந்திருந்த போதிலும், செயற்திட்டச் செலவினம் ரூபா 216,146,352 இனால் வீழ்ச்சியடைந்தமை மேற்கூறப்பட்ட நிதி விளைவின் அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

(அ) 2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதிய அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியம் உருவாக்கப்பட்டதன் நோக்கங்களாக,

* ஆயுதப்படை சேவைகளின் அங்கத்தவர்களுக்கு வீடுகளை நிர்மாணிக்கும் வகையில் நிதிரீதியான உதவிகளை வழங்குவதற்கான முன்மொழிவுத் திட்டமொன்றை ஏற்படுத்துதலும் வீடமைப்பு வசதிகளை வழங்குவதற்காக உதவிகளை வழங்குதலும்.

* ஆயுதப்படை சேவை அங்கத்தவர்களினால் நிதி நிறுவனங்களிலிருந்து கடன்பெற்றுக்கொள்வதற்காகவும் அந்தக் கடனைச் செலுத்துவதற்காகவும் உதவிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளைத் திட்டமிடல்.

* இராணுவப்படை அங்கத்தரொருவர் மரணிக்கும் சந்தர்ப்பத்தின் போது அல்லது காயங்கள் ஏற்படுகின்றபோது கடன் மீளச் செலுத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான முன்மொழிவுத் திட்டமொன்றைத் தயாரித்தல் என்பன காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதியம் உருவாக்கப்பட்டு 08 வருடங்கள் கடந்திருந்த போதிலும், ஆயுதப்படை சேவை அங்கத்தவர்களினால் நிதி நிறுவனங்களிலிருந்து கடன் பெற்றுக்கொள்வதற்காகவும், அந்தக் கடனைச் செலுத்துவதற்காகவும் அங்கத்தவர்களுக்கு உதவி வழங்குவதற்கான ஏற்பாடுகளைத் திட்டமிடல் மற்றும் இராணுவப்படை அங்கத்தரொருவர் மரணிக்கும் சந்தர்ப்பத்தின் போது அல்லது காயமேற்படும் சந்தர்ப்பத்தில் கடன் மீளச் செலுத்தப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான முன்மொழிவுத் திட்டத்தைத் தயாரித்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நிதியத்தின் முகாமைத்துவம் தவறியிருந்தது.

**4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை தொலைத்தொடர்பு கோபுரக் கட்டண வருமானம் ரூபா 96,753,121 ஆக இருந்ததுடன் தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான உடன்படிக்கையின் பிரகாரம் பெறவேண்டிய கட்டணம்/ வருமானம் உரிய காலத்தில் சேகரித்துக் கொள்வதற்காக நிதியத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாததுடன் தாமதத்திற்காக 8 சதவீத வருடாந்த வட்டி அறவிடப்பட்டிருக்கவில்லை. இதனால் நிதி முதலீட்டிலிருந்து உழைக்கக்கூடியதாக இருந்த வட்டி வருமானத்தை நிதியம் இழந்திருந்தது.

**4.3 தாமதமான செயற்திட்டம்**

யுத்தத்தின் போது உயிர்நீத்த இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் யுத்தக் கடமைகளின் போது ஊனமுற்ற மற்றும் சேவையில் ஈடுபட்ட இராணுவ வீரார்களுக்காக 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை 22 மாவட்டங்களில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணிக்கை 1664 ஆக இருந்ததுடன் அதில் 281 வீடுகளின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.4 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

கடைகளின் வாடகை பிணை வைப்பு மற்றும் வருடாந்த வாடகையாக 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை கிடைத்த ரூபா 2,983,665 தொகையொன்று நிதியத்தினால் றணஜயபுர வீடமைப்புத் தொகுதிக்காக பேணப்பட்ட நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இந்தத் தொகை உரிய நடைமுறைக் கணக்கில் 2013 பெப்ரவரி முதல் 2015 திசெம்பர் 31 வரை விளைவவற்றுக் காணப்பட்டது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின்படி மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பிரிவின் படி வருடாந்த பாதீடு தயாரிக்கப்படாதிருந்ததுடன் அந்த சுற்றறிக்கையின் 4.1(இ) பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பாதீடின்றி உரிய நிதியாண்டில் எச்செலவினமும் செலவிடமுடியாதிருந்த போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது ரூபா 190,722,194 தொகையான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் நலிவுகள் அவ்வப்போது செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறைகள் தொடர்பில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| | ---------------------------------------------------- | ---------------------------------------- |
| (அ) | கணக்கீடு | ஆண்டிற்குரிய வருமான செலவினம் சரியாக கணக்கீடு செய்யப்படாமை, செலவின மீளளிப்பு பட்டியல் சமர்ப்பித்தலில் குறைபாடு காணப்படுகின்றமை. |
| (ஆ) | ஒப்பந்த நிர்வாகம் | வீடமைப்பு நிர்மாணம் தாமதமாகியமையால் வீட்டு நலனாளிகளுக்கு வீடுகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டமை. |
| (இ) | நிதிக்கட்டுப்பாடு | காலரீதியாக தொலைத்தொடர்பு கோபுரக் கட்டண பதிவேடு நாளது வரையாக்கப்படாமை மற்றும் அறவிடவேண்டிய கட்டணம் அறவிடப்படாமை, மேலதிக பணம் முதலீடு செய்யப்படாமை. |